www.tamilarangam.net

# இலங்கைச் சிக்கலை இனியாவது எருத்துச் சொல்லுங்கள் !

இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனே தம் இந்தியப் பயணத்தை முடிக்கும் தறுவாயில் சென்னையில் ஆளுநர் மாளிகையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி செய்தித்தாள்களில் விரிவாக வெளிவந்துள்ளது.

அந்தப் பேட்டியில் தம்மைப் பற்றி "மொழி, மதம், சாதி ஆகியவற்றில் நம்பிக்கை உடையவன் இல்லை. பிரச்சினைகள் அவற்றின் தகுதி அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்றே விரும்புகிறேன்" (தினமணி 8—11—78) என்று கூறியுள்ளார். இது எந்த அளவு உண்மைக்குப் புறம்பானது என்பது அவரின் கடந்த கால நடவடிக்கைகளையும், நிகழ்காலக் குடியரசுத் தலைவராகச் செயல்படும் முறையையும் கூர்ந்து கவனித்து வருபவர்களுக்கு நன்கு தெரியும்.

அந்த அளவுக்குக்கூட போக வேண்டியதில்லை. செய்தியாளர்களுக்குத் தந்துள்ள இந்தப் பேட்டியே தமிழர்கள்மீது அவர் கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியைக் காட்டபோதுமானது.

ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ் பேசும் மக்கள் மூன்று வகையானவர்கள் என்றும் தமிழ் பேசும் முஸ்லிம்கள், ஆங்கிலேயர்களால் குடியமர்த்தப்பட்ட தமிழ்பேசும் மக்கள் ஆகிய இருவகையினரைக் குறித்த வரையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்றும் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீலங்காவில் குடியேறிய தமிழ் மக்கள் அதாவது தமிழர்கள்தான் ஓரளவு பிரச்சினையாக இருக்கிறார்கள்" (தினமணி 8-11-78) எனும் இந்தப் பகுதியைக் கூர்ந்து கவனித்தால் தமிழர்களிடையே பிளவு ஏற்படுத்தும் அவர் சூழ்ச்சித் திறனும் ஈழத்தையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழர்களைக்கூட வந்தேறிகளாகக் காட்டுவதில் அவருக்கிருக்கும் ஆர்வமும் தெளிவாகத் தெரிகின்றன.

100 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீலங்காவில் குடியேறிய தமிழர்கள்தான் ஓரளவு பிரச்சினையாக இருக்கிறார்களாம். அவர் குறிப்பிடும் தமிழர்கள் யார் தெரியுமா? இலங்கையின் பூர்வீகக் குடிகளாக இருந்துவரும் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழர்கள்தாம். குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களையே அவர் வந்தேறிகள் என்கிறார். இது பெரும் பொய். அதுவும் அவர்கள் 100 ஆண்டுகளுக்கு முன் குடியேறினார்களாம். இது அப்பட்டமான பொய். தோட்டத் தொழிலாளர்களாக இந்தியத் தமிழர்கள் குடியேறியே 100 ஆண்டுகளுக்கு மேலாகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

வந்தேறிகள் என்று கூறித் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கும் இலங்கை அரசு யாழ்ப்பாணத் தமிழர்கள்போன்ற பூர்வீகத் தமிழர்களையும் திருப்பி அனுப்புவதற்குத் திட்டமிடுகிறதோ என்னும் ஐயத்தைத்தான் அவர்களையும் வந்தேறிகளாகக் காட்டும் குடியரசுத் தலைவரின் கூற்று நமக்கு உருவாக்குகின்றது.

இலங்கையின் பூர்வீகக் குடிகளாகத் தமிழர்கள் இருந்தனர் என்பது பண்டைய வரலாற்றுச் சான்றுகளால் நிறுவப்பட்டுள்ளது. அதைப்போலவே நிறுவப்பட்டுள்ள மற்றொரு உண்மை சிங்களவர்கள் வந்தேறிகள் என்பதாம். அவர்கள் கி. மு. 5ஆம் நூற்றாண்டில் வந்தேறினார்கள் என்பதும் அவர்கள் குடியேறியபோது இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதும் **சிங்கள 'மகாவம்சமே'** காட்டும் மறுக்க முடியாத உண்மைகளாம்.

நிலைமை இப்படியிருக்க இலங்கையின் பூர்வீகத் தமிழர்களையும் வந்தேறிகளாகக்காட்டுகிற செயவர்த்தனே எவ்வளவு நேர்மையானவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

இலங்கைத் தமிழர்களை வந்தேறிகளென தமிழகத் தலைநகரிலேயே இழிவுபடுத்தும் இந்தச் செயவர்த்தனேதாம் சாதி நம்பிக்கையற்றவராம். நாம் நம்ப வேண்டுமாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொன்றுதொட்டு தமிழர்களே வாழ்ந்து வரும் நிலப்பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதில் தீவிரம் காட்டி வரும் இவரா சாதி நம்பிக்கையற்றவர்?

தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றத் தொழிலாளர்கள் தேவைப்படும் நிலையிலும், இந்தியத் தமிழர்களைத் திட்டமிட்டபடி வெளியேற்றிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர் இவர் தானே.

இந்தியப் பயணத்தின் பெரும் பகுதியைப் புத்தமதச் சின்னங்களைக் காண்பதிலேயே கழித்த இவர் தாம் மதநம்பிக்கையற்றவராம். புதிய அரசியல் சட்டம் கண்டு தம்மைக் குடியரசுத் தலைவராக ஆக்கிக்கொண்டுள்ள இவரால் தம் அரசை மதச் சார்பற்றது என அறிவிக்க இயலுமா? இலங்கையின் அரசு மதம் புத்தமதம் என்பது நமக்குத் தெரியாதா?

தம்மை மொழியில் நம்பிக்கையற்றவராக எந்த மொழி மீதும் ஈடுபாடில்லாதவராக இவர் காட்டிக்கொள்வது விந்தையிலும் விந்தை. இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்கிறது அரசியல் சட்டம். தமிழ் ஆட்சிமொழி இல்லை. வெறும் தேசிய மொழியே. சிங்களத்திற்குத் தலைமை தரும் அந்த அரசியல் சட்டம்தான் இவ்வாறு கூறுகின்றது. இந்த நிலை இலங்கையில் ஏற்பட பெரிதும் பாடுபட்டவர் யார்?

''சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சிமொழி; பௌத்தம் மட்டுமே இலங்கையின் அரசு மதம்; தமிழர்களுக்குச் சமவுரிமை வழங்கக்கூடாது'' என்ற வெறித்தனமான சிங்கள இனவாத கோரிக்கைகளை மட்டுமே முன்வைத்துக் கொழும்பிலிருந்து கண்டிக்குப் **'பேர்போன கண்டி யாத்திரை'** நடத்தியவர் யார்? இன்று தம்மை மொழி, சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவராகக் காட்டிக்கொள்ளும் இந்தச் செயவர்த்தனே தாம் என்கிறது இலங்கை வரலாறு.

அன்றைய பண்டாரநாயகாவின் தலைமையில் அமைந்த அரசு எங்கே தமிழர்களுக்குச் சமவுரிமை கொடுத்துவிடுமோ எனத் துடிதுடித்து, பதை பதைத்து எதிர்ப்புப் போராட்டம் நடத்தித் தமிழர்களுக்குக் கிடைக்க இருந்த ஓரிரு சலுகைகளையும் கிடைக்காமற் செய்த இந்தப் 'புண்ணியவான்'தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைத் தமிழர்களின் துன்பங்களுக்குத் தீர்வு கண்டு விட்டதாகத் திருவாய் மலர்ந்திருளுகின்றார். எல்லாம் 'ஏட்டுச் சுரைக்காய்'கள் தான்.

எது எப்படி நடந்தால் எமக்கென்ன என்றிருக்கும் அரசியல் வாதிகளே, அந்த அரசியல்வாதிகளையே நம்பியிருக்கும் அப்பாவித் தமிழர்களே, போராடும் இலங்கைத் தமிழர் செய்திகளை இருட்டடிப்புச் செய்துவிட்டுச் ஜெயவர்த்தனே செய்திக்கு மட்டும் சிறப்பிடம் தந்த செய்தியாளர்களே இலங்கைக் குடியரசுத்தலைவர் ஜெயவர்த்தனே எப்படிப்பட்டவர் என்பதை இப்போதாவது உணருங்கள்! இலங்கைத் தமிழர்களின் பக்கம் இருக்கும் நியாயங்களை இனியாவது எடுத்துச் சொல்லுங்கள்!!

**தமிழக ஈழ நட்புறவுக் கழகம்**

75, ஆழ்வார்பேட்டைத் தெரு,

சென்னை–600018

---

**இலங்கையின் உண்மை வரலாற்றை அறிய**

# இலங்கையில் ஈழம்

விலை ரூ. *1-00*

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்